**தலைப்பு – 123 நிர்மாணம், பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கை இரு பகுதிகளைக் கொண்டதாகும்.

I. ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

2.. ஆம் பகுதி - ஒவ்வொரு ஒதுக்கீட்டு கணக்கிற்குரிய விபரமான அறிக்கை.

பகுதி I

**நிர்மாணம், பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை**

---

அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

| **தலைப்பு** | **திணைக்களம்** |
|---|---|
| 309 | கட்டிடத் திணைக்களம் |
| 310 | அரசாங்க தொழிற்சாலை |
| 311 | தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம் |

**2. கணக்குகள்**

**2.1 ஓதுகீட்டுக் கணக்கு**

**மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 03 திணைக்களங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 3,855,521,554 ஆனதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் இதில் ரூபா 3,091,867,529 அதாவது 80.19 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சினதும்

ஒவ்வொரு திணைக்களங்களினதும் தேறிய ஏற்பாடுகளில் சேமிப்புகள் ரூபா 4,719,829 தொகைக்கும் ரூபா 540,491,284 தொகைக்கும் இடையிலான வீச்சில் அதாவது தேறிய ஏற்பாட்டில் 3 சதவீதத்திற்கும் 51 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டன. விபரம் பின்வருமாறாகும்.

| தலைப்பு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | |
| --- | --- | --- | --- | --- |
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 123 | 3,042,140,000 | 2,501,648,716 | 540,491,284 | 17.77 |
| 309 | 282,309,000 | 255,016,629 | 27,292,371 | 9.67 |
| 310 | 374,107,830 | 182,957,289 | 191,150,541 | 51.10 |
| 311 | 156,964,724 | 152,244,895 | 4,719,829 | 3.01 |
| | **3,855,521,554** | **3,091,867,529** | **763,654,025** | **19.81** |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாரளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 03 திணைக்களங்களின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளவாறான பெறுமதிகள் பின்வருமாறு.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 12301 | 7,500,000 | 5,528,569 | 4,000,000 | 5,148,395 | 70,000,000 | 23,877,959 |
| 30901 | 20,000,000 | 16,342,773 | 12,000,000 | 15,376,865 | 85,000,000 | 46,168,430 |
| 31001 | 28,000,000 | 18,431,869 | 18,000,000 | 19,829,422 | 122,000,000 | 86,058,391 |
| 31101 | 14,000,000 | 5,772,892 | 7,400,000 | 12,367,902 | 90,000,000 | 30,270,981 |

### 2.2.2 வியாபார முற்பணக் கணக்குகள்

அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க தொழிற்சாலையால் விடய இல. 31002 மற்றும் 31003 என முறையே களஞ்சிய முற்பணக் கணக்கு மற்றும் செய்யப்பட்ட வேலை முற்பணக் கணக்கு என இரண்டு வியாபார முற்பணக் கணக்குகள் பேணப்பட்டிருந்தன.

### (அ) பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்

அரசாங்க தொழிற்சாலை வியாபார முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான மீதிகள் பின்வருமாறாகும்.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | | பொறுப்புகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 31002 | 200,000,000 | 193,180,922 | 120,000,000 | 219,514,531 | 10,000,000 | 4,353,447 | 92,000,000 | 64,512,379 |
| 31003 | 450,000,000 | 430,391,111 | 280,000,000 | 459,937,207 | 180,000,000 | 117,828,358 | 5,000,000 | 1,632,964 |

**(ஆ) நிதி விளைவுகள்**

இரு வியாபார முற்பணக் கணக்குகளின் நிதி விளைவுகள் பின்வருமாறாகக் காணப்பட்டன.

| விடய இல. | முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் | நிதி விளைவுகள் 2013 | | 2012 | |
|---|---|---|---|---|---|
| | | உத்தேச செலவுகளைத் தவிர்த்து இலாபம்/(நட்டம்) | உத்தேச செலவுகளை உள்ளடக்கிய இலாபம் /(நட்டம்) | உத்தேச செலவுகளைத் தவிர்த்து இலாபம் /(நட்டம்) | உத்தேச செலவுகளை உள்ளடக்கிய இலாபம்/ (நட்டம்) |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 31002 | களஞ்சிய முற்பணக் கணக்கு | 36,472,459 | 36,472,459 | (9,928,957) | (9,928,957) |
| 31003 | செய்யப்பட்ட வேலை முற்பணங்கள் கணக்கு | 25,439,298 | 25,238,298 | 101,485,931 | 101,284,931 |

## 2.3 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

### 2.3.1 கட்டுநிதி கணக்குகள்

அமைச்சின் கீழுள்ள இரு திணைக்களங்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கட்டுநிதி கணக்கு மீதிகளின் ரூபா 13,433,583 தொகையானதுடன் இது தொடர்பான விபரம் பின்வருமாறு காணப்பட்டது.

| திணைக்களம் | கட்டுநிதிக் கணக்கு இல. | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| கட்டிடத் திணைக்களம் | 7002/0000/00/0067/0013/000 | 3,314 |
| அரசாங்க தொழிற்சாலை | 7002/0000/00/0043/0013/000 | 13,430,269 |
| **மொத்தம்** | | **13,433,583** |

**2.3.2 பொது வைப்புக் கணக்கு**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள மூன்று திணைக்களங்களின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 735,076,277 ஆனதுடன் அது தொடர்பான காலப்பகுப்பாய்வு பின்வருமாறாகும்.

| அமைச்சு/ திணைக்களம் | வைப்புக் கணக்கு இல | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| நிர்மாணம் பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு | 6000/0000/00/0015/0079/000 | 865 |
| கட்டிடத் திணைக்களம் | 6000/0000/00/0015/0163/000 | 91,219,127 |
| அரசாங்க தொழிற்சாலை | 6000/0000/00/0015/0176/000 | 641,321,928 |
| தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம் | 6000/0000/00/0015/0164/000 | 1,721,369 |
| | 6000/0000/00/0015/0165/000 | 812,988 |
| மொத்தம் | | 735,076,277 |

## பகுதி 2

## ஒவ்வொரு தலைப்பிற்குரிய விபரமான அறிக்கை

### 1. தலைப்பு 123 – நிர்மாணம், பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

நிர்மாணம், பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஒக்டோபர் 23 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள், மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தெடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்

பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக்கட்டுப்பாட்டுத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**1.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்**

---

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், நிர்மாணம், பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள், இதன் பந்தி (அ) இலிருந்து (இ) வரை காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டுள்ளது.

**(அ) பாதீட்டு முரண்**

---

செலவின விடயங்கள் 03 இற்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து மிகுதி அச் செலவின விடயத்திற்குரித்தான தேறிய ஏற்பாட்டில் 23 சதவீதத்திற்கும் 41 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சைக் கொண்டிருந்தது.

**(ஆ) பொது வைப்பு கணக்கு**

---

02 ஆண்டுகள் கடந்த ரூபா 90,625 தொகையான 03 வைப்புகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

---

12301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட

ரூபா 68,770 தொகையான மீதி காணப்பட்டதுடன் அந் நிலுவை மீதி அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று இருந்த போதிலும் போதிய உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

2013 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதன் மூலம் வாகனம் தொடர்பான ஓர் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 1.6 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i). | சிரேஷ்ட நிலை | 27 | 24 | 03 | - |
| (ii). | மூன்றாம் நிலை | 04 | 01 | 03 | - |
| (iii). | இரண்டாம் நிலை | 107 | 99 | 08 | - |
| (iv). | ஆரம்ப நிலை | 44 | 41 | 03 | - |
| (v). | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 02 | - | 02 |
| | மொத்தம் | 182 | 167 | 17 | 02 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 17 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

**2. தலைப்பு – 309 கட்டிடத் திணைக்களம்**

---

**2.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

கட்டிடத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஒக்டோபர் 20 ஆம் திகதி திணைக்களத் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும், இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

**2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத்

தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் செயற்படுத்துதலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்கீட்டு அவதானிப்புகள்**

---

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், கட்டிடத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள், இங்கே பந்திகள் (அ) இல் இருந்து (ஆ) வரை காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 முதல் 2.8 வரையான பந்திகளில் குறப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

**(அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை**

---

திணைக்களத்தால் 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பொது வைப்புக் கணக்கு**

---

02 ஆண்டுகள் கடந்திருந்த ரூபா 22,496,331 தொகையான 192 வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

---

**உள்ளகக் கணக்காய்வு**

---

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று திணைக்களத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களங்களின் 02 மோட்டார் வாகனங்கள் 04 ஆண்டுகளுக்கு மேலான காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

**2.6 செயற்திட்டம் செயற்படுத்தலிலான நலிவுகள்**

(அ) செயற்திட்டம் நிறைவேற்றுவதிலுள்ள தாமதங்கள்

திணைக்களத்தால் பின்வரும் செயற்திட்டங்கள் மேற்கொள்வதிலான தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டத்தின் பெயர் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | பூர்த்திசெய்யப்பட வேண்டிய திகதி | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில் | | | % | |
| ஹோமாகம பாளி மற்றும் பௌத்த பல்கலைக்கழகத்தின் மாசடைந்த நீரை அகற்றும் முறையை மேம்படுத்தல் | 5.130 | 2013.07.13 | 2013.09.30 | 90 | பணம் கிடைக்காமை |
| பிரதமர் அலுவலகத்தின் வாகனத்தரிப்பிட மேம்பாடு | 57.647 | 2013.04.28 | 2013.12.30 | 66 | தொழிலாளர் பற்றாக்குறை |
| ரிதியாகம சபாரி பாக்கில் 04 உத்தியோகபூர்வ விடுதிகளை நிர்மாணித்தல் | 43.250 | 2013.07.02 | 2013.12.30 | 70 | காரணங்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அரசாங்கத் தொழிற்சாலையில் முச்சக்கர வண்டித் தரிப்பிடங்களை நிர்மாணித்தல் | 6.30 | 2013.09.26 | 2013.10.23 | 50 | காணித் தீர்வுப் பிரச்சனை |
| அரசாங்கத் தொழிற்சாலையின் எல்லைச்சுவரை நிர்மாணித்தல் | 16.38 | 2013.10.28 | 2013.12.02 | 35 | காரணங்கள் முன்வைக்கப்பட் டிருக்கவில்லை. |

**(ஆ) செயற்திட்டம் நிறைவேற்றப்படாது கைவிடப்பட்டமை**

திணைக்களத்தால் சம்மாந்துறை நெல் ஆராய்ச்சி நிறுவகத்தின் உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ விடுதி நிர்மாணிப்புச் செயற்திட்டம் ரூபா 7.675 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2012 யூன் 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2.43 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தக்காரரின் தாமதம் காரணமாக செயற்திட்டம் நிறைவேற்றப்படாது கைவிடப்பட்டிருந்தது.

**2.7 நட்டங்களும் இழப்புகளும்**

2011 யூலை 01 ஆம் திகதி விபத்திற்குட்பட்ட வாகனத்திற்கு நேர்ந்த இழப்பின் பெறுமதி ரூபா 344,221 ஆகக் காணப்பட்டதுடன் இதில் காப்புறுதியால் செலுத்தப்படாத ரூபா 70,262 தொகையான நட்டம் ஒதுக்கீட்டுக் கணக்கில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. மேலும், இந் நட்டம் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்படுவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.8 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i). | சிரேஷ்ட நிலை | 110 | 64 | 37 | - |
| (ii). | மூன்றாம் நிலை | 23 | 10 | 13 | - |
| (iii). | இரண்டாம் நிலை | 233 | 177 | 56 | - |
| (iv). | ஆரம்ப நிலை | 178 | 120 | 42 | - |
| (v). | ஏனையவை | - | 16 | - | 16 |
| | மொத்தம் | **544** | **387** | **148** | **16** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

148 வெற்றிடங்களில் 84 பொறியியலாளர்கள், வீட்டு வடிவமைப்பு நிபுணர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் வடிவமைப்பாளர்கள் என திணைக்களத்தின் முக்கிய பணிகளில் நேரடியாக தொடர்புபடும் உத்தியோகத்தர்களைக் கொண்டதுடன் இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டின் போதும் திணைக்களம் தவறியிருந்தது.

## 3. ஒதுக்கீட்டு தலைப்பு – 310 - அரசாங்கத் தொழிற்சாலை

### 3.1 கணக்காய்வின் நோக்கெல்லை

அரசாங்க தொழிற்சாலையின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணைக்கக் கூற்றுக்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 சனவரி 27 ஆம் திகதி தொழிற்சாலைப் பொறியியலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள், இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதி அறிக்கை, இணைக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

### 3.2 கணக்குகள், இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தர்களினதும் கணக்களிப்பு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணைக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தயாரித்தல் மற்றும் நியாயமுறையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரியவகையிலான உள்ளகக்கட்டுப்பாடு தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 3.3 கணக்காய்வு அவதானிப்புகள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், அரசாங்க தொழிற்சாலைகளின் ஒதுக்கீட்டுக் கணக்குகளும் இணக்கக் கூற்றுக்களும் வணிக முற்பணக் கணக்குகள் மற்றும் வணிகமற்ற முற்பணக் கணக்குகள் என்பன இதன் (அ) முதல் (ஏ) வரை காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 3.4 முதல் 3.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகளைத் தவிர்த்து, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

### (அ) ஏடுகள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை

திணைக்களத்தால் அரசாங்க வீடுகள் தொடர்பாக பின்வரும் பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை.

(i) அரசாங்கத்தால் வீடுகள் வழங்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களின் விபரம் அடங்கிய நாளதுவரையாக்கப்பட்ட பதிவேடு.

(ii) தொழிற்சாலைக்குச் சொந்தமான வகைப்படுத்தப்பட்ட அரசாங்க வீடுகள் தொடர்பான பதிவேடு

(iii) ஒவ்வொரு வீட்டிற்காகவும் நாளதுவரையாக்கப்பட்ட கோவைகள்

### (ஆ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கடன் கோவை அல்லது ஏனைய எவ்வித சான்றும் திணைக்களத்தில் இல்லாத காரணத்தால் 05 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 74,929 கூட்டுத்தொகையான நிலுவையான கடன் மீதி அறவிடப்படுவதை திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**(இ) எல்லைகள் பின்பற்றப்படாமை**

**----------------------------------------------**

31003 ஆம் விடய இலக்க செய்யப்பட்ட வேலை முற்பணக் கணக்குகளின் செயற்பாட்டிற்குரித்தாக மீளாய்வாண்டிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த ஆகக் கூடிய வரவு மீதி எல்லை ரூபா 180,000,000 ஆன போதிலும் உள்ளபடியான வரவு மீதி ரூபா 362,360,453 தொகையான காரணத்தால் வரவு மீதி எல்லை மீறல் ரூபா 182,360,453 ஆக அதாவது 101 சதவீதமாகக் காணப்பட்டது.

**(ஈ) பாதீட்டு முரண்**

**----------------------**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 03 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,025,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 05 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து மிகுதி அச் செலவின விடயங்களுக்குரித்தான தேறிய ஏற்பாட்டில் 22 சதவீதத்திற்கும் 63 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சைக் கொண்டிருந்தன.

**(உ) கட்டுநிதிக் கணக்குகள்**

**------------------------------------**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் தீர்க்கப்பட்டிராத 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதி மீதிக் கூட்டுத்தொகை ரூபா 446,037 ஆகக் காணப்பட்டது.

(ii) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 43/13 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் தீர்க்கப்படாத வரவு மீதி ரூபா 13,430,269 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இதில்

ரூபா 1,083,784 அவ்வாண்டின் போது தீர்க்கப்பட்டிருந்த காரணத்தால் கட்டுநிதிக் கணக்கு மீதி அதே தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஊ) பொது வைப்புக் கணக்கு**

-----------------------------------------

2 ஆண்டுகள் கடந்த ரூபா 253,244 தொகையான 28 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(எ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 31001 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 907,372 தொகையானதுடன் அந் நிலுவை மீதியை காணப்பட்டதுடன் அந் நிலுவை மீதியினை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ii) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆறு உத்தியோகத்தர்களின் விழா முற்பணத்தின் கூட்டுத்தொகையான ரூபா 20,000 தொகையும் ஏழு உத்தியோகத்தர்களின் விசேட முற்பணக் கூட்டுத்தொகையான ரூபா 7,250 தொகையும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் படி, அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 27,250 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஏ) வியாபார முற்பணக் கணக்குகள்**

--------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 31002 ஆம் விடய இலக்க களஞ்சிய முற்பணக் கணக்கில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்கொடுத்தோர் மீதி ரூபா 62,880,677 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 3,017,046 குறைத்துப் பதியப்பட்டமை மற்றும் ரூபா 1,358,665 அதிகரித்துப் பதியப்பட்டமை சீராக்கப்பட்டதை அடுத்து அத் திகதியிலான சரியான கடன்கொடுத்தோர் மீதி ரூபா 64,539,058 ஆகக் காணப்பட்டது. இதன் படி, கடன்கொடுத்தோர் மீதி ரூபா 1,658,381 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 31003 ஆம் விடய இலக்க செய்யப்பட்ட வேலை முற்பணக் கணக்கில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்பட்டோர் மீதி ரூபா 362,360,452 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அம் மீதி மற்றும் இணங்கும் வகையில் தனியான கடன்பட்டோர் பேரேடொன்று பேணப்படுவதற்கும் அத் தனியான கடன்பட்டோர் கணக்குகள் மாதாந்தம் அல்லது வருடாந்தம் சமப்படுத்தப்பட்டு கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகளுடன் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட கடன்பட்டோர் மீதியை உறுதிப்படுத்துவதற்காக விபரமான பட்டோலையும் பகுப்பாய்வும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 31003 ஆம் விடய இலக்க செய்யப்பட்ட வேலை முற்பணக் கணக்கிற்கு உரித்தான 1995 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரை 224 கடன்பட்டோர் மீதிகளுக்குரித்தான ரூபா 53,161,909 தொகையை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

## 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### உள்ளகக் கணக்காய்வு

நிதிப் பிரமாணம் 133 மற்றும் 2009 சனவரி 09 ஆம் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியில் காணப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே நிர்மாணம், பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினாலோ அல்லது அரசாங்கத் தொழிற்சாலையின் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.5 சொத்து முகாமைத்துவம்

(அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்டவாறு சில சொத்துக்கள் விளைவற்ற அல்லது குறைவான பயன்பாடுடையதாகக் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | பெறுமதி | விளைவற்ற அல்லது குறைவான பயன்பாடுடையதாகக் காணப்பட்ட காலப்பகுதி |
|---|---|---|---|---|
| (i) | கொலொன்னாவ அரசாங்கத் தொழிற்சாலைக் காணி | 15 ஏக்கர் | கண்டறிய முடியவில்லை | இக் காணியின் 02 ஏக்கர் அளவான ஓர் பகுதி 25 ஆண்டுகளுக்கு மேலான காலமாக அத்துமீறிய குடியிருப்பாளர்களால் அனுபவிக்கப்படுவது உறுதிப்படுத்தப்பட்டது. |
| (ii) | இயந்திர உபகரணங்கள் பவுடர் கோடிங் இயந்திர நிலையம் | 01 | கண்டறிய முடியவில்லை | 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் |

| | | | |
|---|---|---|---|
| யூனிவேர்ஸல் டுல் சாப்னர் | 01 | 1,440,000 | 01 வருடத்திற்கு மேற்பட்ட காலம் |
| பவர் பிரேஸ் இயந்திரம் | 01 | 1,109,304 | 01 வருடத்திற்கு மேற்பட்ட காலம் |
| Hollow Chisel Moriser & Borer | 01 | 2,728,250 | 01 வருடத்திற்கு மேற்பட்ட காலம் |

(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புகள்

திணைக்களத்தால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புகளின் பெறுமதி ரூபா 53,800,863 ஆகக் காணப்பட்டதுடன் இதில் ரூபா 15,554,066 தொகையான பொறுப்புகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.6 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்கியிராத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | |
| XIX ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பந்தி | 69,501 | 34 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 69,501 தொகையான வீட்டு வாடகை குறைவாக அறவிடப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) கொள்வனவு வழிகாட்டிக் கோவை<br>-------------------------------------------- | | |
| 3.3 ஆம் பிரிவு | 12,809,816 | இப் பிரிவிற்கு முரணாக விலைக் கோரல் முறையைப் பயன்படுத்தி மீளாய்வாண்டின் போது இயந்திரங்களும் வாகனங்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |

**3.7 செயலாற்றல்**

**-----------------------**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி, 09 செயற்திட்டங்களின் இலக்கிட்ட வருமானம் ரூபா 262.87 மில்லியன் தொகையான போதிலும் செயன் முன்னேற்ற மீளாய்வு அறிக்கைகளின் படி, வருடாந்த முன்னேற்றம் ரூபா 135.48 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. இதன் படி, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட நிலையைப் பார்க்கிலும் 0.9 முதல் 82 சதவீதம் வரையான வீச்சில் குறைந்த நிலையில் காணப்பட்டது.

(ஆ) 2013 வருடாந்த மதிப்பீட்டின் மூலம் பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 308.56 மில்லியன் தொகை வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

**-----------------------------------------------------**

கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.3 இப் படி விலைக் கோரல்கள் மேற்கொள்ளப்படுகையில் சகல வழங்குனரினதும் எண்ணிக்கை குறைவாக இருப்பின் அவர்கள் உள்ளடங்கலாக போட்டி விலைமனுக்களை முன்வைக்கும் வழங்குனரிடமிருந்தும் மனுக்கள் கோரப்பட வேண்டிய போதிலும் 2013 நவம்பர் 30 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட Boom truk மனுக்கள் கோரப்பட வேண்டிய போதிலும் 2013 நவம்பர் 30 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட Boom truck 01 இற்காக 06 நிறுவகங்களுக்கு

கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் இதில் 02 நிறுவகங்கள் மாத்திரமே கேள்வி மனுக்களைச் சமர்ப்பித்திருந்தன. பின்னர் அவ் 02 நிறுவகங்களிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகள் கருத்திற்கொள்ளப்பட்டு இவ் Boom truck வண்டி ரூபா 11,540,505 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

**3.9 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 21 | 15 | 06 |
| (ii) | மூன்றாம் நிலை | 07 | 05 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 125 | 100 | 25 |
| (iv) | ஆரம்ப நிலை | 466 | 370 | 96 |
| | மொத்தம் | **619** | **490** | **129** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திணைக்களத்தின் மொத்த ஊழியர் எண்ணிக்கையில் 20 சதவீதமான 129 வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதில் சிரேஷ்ட நிலையில் 6 வெற்றிடங்களும் இரண்டாம் நிலையில் 25 வெற்றிடங்களும் ஆரம்ப நிலையில் 96 வெற்றிடங்களும் காணப்பட்டன.

**4. தலைப்பு – 311 - தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம்**

---

தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணைக்கக் கூற்றுக்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஒக்டோபர் 03 ஆம் திகதி திணைக்களத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள், இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதி அறிக்கை, இணைக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

**4.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணைக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்ற வகையிலான நிதி அறிக்கை, இணைக்கக் கூற்றுக்கள் தயாரித்தல் மற்றும் நியாயமுறையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரியவகையிலான

உள்ளகக்கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 4.3 கணக்காய்வு அவதானிப்புகள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இதன் (அ) மற்றும் (ஆ) இல் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 4.4 இலிருந்து 4.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட ஏனைய அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

திணைக்களத்தால் 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

(i) 31101 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதிக்கு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,856,257 தொகையானதுடன் இந் நிலுவை மீதியை அறவிடுவதற்காக நிறுவகம் தவறியிருந்தது.

(ii) கடன் செலுத்தப்படுகையில் பின்பற்றப்பட வேண்டிய ஏற்பாடுகள் பின்பற்றப்படாது 1997 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 175,000 தொகையான கடன் தொகையில் ரூபா 121,305 தொகை 2014 செப்தெம்பர் 25 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட முடியாதிருந்தது.

## 4.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

---

### வருடாந்த கொள்வனவுத் திட்டம்

---

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டிற்கான ஓர் கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதவியவற்றுடன் இணங்காமை

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் - 104 இற்கமைய நட்டம் அல்லது இழப்பு நேர்ந்ததை உடனடுத்து அதன் அளவு அல்லது காரணம் நிச்சயமாகத் தெரிந்து கொண்டு, அதற்குப் பொறுப்பு வாய்ந்தவர்களை நிச்சயிப்பதற்காக விசாரணைகளை ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் பழுதுபார்த்தல் செலவினமான ரூபா 1,029,029 தொகையான வாகன விபத்திற்குரித்தாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.6 செயலாற்றல்

---

தேசிய பௌதீக திட்டமிடலின் மூலம் இனங்காணப்பட்ட செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக காணிகளை இனங்கண்டு ஆரம்ப சாத்தியவளக் கற்கை நடவடிக்கைகளின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி பௌதீக முன்னேற்றம் 30 சதவீதமாகக் காணப்பட்டது.

**4.7 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 40 | 10 | 30 |
| (ii) | மூன்றாம் நிலை | 13 | 2 | 11 |
| (iii) | இரண்டாம் நிலை | 135 | 83 | 52 |
| (iv) | ஆரம்ப நிலை | 47 | 32 | 15 |
| | மொத்தம் | **235** | **127** | **108** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் 108 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் ஆட்சேர்ப்பு நடைமுறையை அங்கீகரித்துக்கொள்வதற்கு தவறியிருந்தது.

(ஆ) சிரேஷ்ட, மூன்றாம், இரண்டாம் மற்றும் முதலாம் நிலைகளில் வெற்றிட எண்ணிக்கை அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு ஒப்பீடாக முறையே 75 சதவீதமாகவும், 85 சதவீதமாகவும் 39 சதவீதமாகவும், 32 சதவீதமாகவும், காணப்பட்டது. ஓவ்வொரு சேவை நிலையிலும் அத்தகைய பாரிய வெற்றிட எண்ணிக்கை நிலவுவது நிறுவகத்தின் செயற்பாடுகளின் செயற்திறனையும் வினைத்திறனையும் பேணுவதற்கு சவாலாகாது என்பது குறித்து கணக்காய்வில் தவிர்க்க முடியாதுள்ளது.